வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்
ந.க.எண். 2088/ஆ4 /2025 நாள் : 14.05.2025

| | |
|---|---|
| பொருள்: | தேர்வுகள் –மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு, ஜூன்/ஜூலை–2025 தனித்தேர்வர்கள் சேவை மையங்கள் (Service Centres) மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் சார்பான அறிவுரை வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை : | சென்னை– 6. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.005985 / /எச்1/2025. நாள்:13.05.2025 |

#######

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி ஜூன்/ஜூலை –2025 –ல் மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வெழுத பள்ளி மாணவர்கள் தாம் பயின்ற பயின்ற பள்ளிகளின் வழியாகவும், தனித்தேர்வர்கள் ஆன்–லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு வேலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் 3 (Service Centres) சேவை மையங்களுக்கு நேரில் சென்று 14.05.2025(புதன்கிழன்மை) முதல் 29.05.2025 (வியாழக்கிழமை) வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் 30.05.2025 (வெள்ளிக்கிழமை) முதல் 31.05.2025(சனிக்கிழமை) வரையிலான நாட்களில் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தனித் தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கு 14.05.2025 முதல் வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோருக்கு கீழ்க்கண்டவாறு ஆன்–லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தி பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க (Service Centres) அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பார்வையில் காணும் அரசுக் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அக்கடிதத்தில் கூறிய அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

## <u>வேலூர் மாவட்டத்தில் செயல் படும் 3 சேவை மையங்கள்</u>

1. அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்,
2. அரசு நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளி, தோட்டப்பாளையம்,
3. அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி.

//ஓம்.சு.தயாளன்//
முதன்மைக் கல்வி அலுவலர்,(பொ)
வேலூர்.

பெறுநர் :

அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பாள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்–

மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்)
வேலூர். (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)